


**08. 09. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. **உலகளாவிய வர்த்தகம் மற்றும் அறிவுசார்** மையமாக இந்தியாவை மேம்படுத்த நாட்டுமக்கள் செயலாற்றுவதன் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தினார்.

2. **குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் பி.ஜே.பி.** நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பதற்கான நடைமுறைகள் குறித்த பயிலரங்கில் பிரதமர் திரு. நநேரந்திரமோடி இன்று உரையாற்றுகிறார்.

3. **ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளிலிருந்து** தமிழ்நாட்டிற்கு 15 ஆயிரத்து 516 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

4. **மருத்துவத்துறையில் தமிழகம் முன்னோடி மாநிலமாக** திகழ்கிறது என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

5. **ஆசிய** கோப்பை மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா தற்போது சிங்கப்பூரை எதிர்கொண்டுள்ளது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖❖

**குடியரசு தலைவர்**

**உலகளாவிய வர்த்தகம் மற்றும் அறிவுசார்** மையமாக இந்தியாவை மேம்படுத்த நாட்டுமக்கள் செயலாற்றுவதன் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தினார்.

புதுதில்லியில் பொறியியல் ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுவின் பவளவிழாவில் இன்று உரையாற்றியஅவர், நாட்டின் பொருளாதாரம் தற்சார்பை எட்ட வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

ஏற்றுமதியில் முன்னோடி நாடாக நம் தேசம் மேம்பட வேண்டுமென்றும் அறிவுறுத்திய அவர், கோவிட் காலத்தில் சுயசார்பு பாரதத்திற்கான அடித்தளமிடப்பட்டு தொடர் நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதாக கூறினார்.

உலகளாவிய தேக்கநிலையின் தாக்கம் நம் பொருளாதாரத்தை பாதிக்காதவாறு சுயசார்பு பாரதத்தின் பரிமானம் அமைய வேண்டுமென்றும் குடியரசு தலைவர் அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖

**பிரதமர்**

**குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் பி.ஜே.பி.** நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பதற்கான நடைமுறைகள் குறித்த பயிலரங்கின் நிறைவு நாளில் பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று உரையாற்றுகிறார்.

குடியரசு துணைத்தலைவர் தேர்தல் நாளை நடைபெறவுள்ள நிலையில் உறுப்பினர்களுக்கு வாக்களிப்பதற்கான அடிப்படை நடைமுறைகள் குறித்த பயிற்சி வகுப்புகள் புதுதில்லியில் நேற்று தொடங்கின.

இந்த கூட்டத்தின் அனைத்து அமர்வுகளிலும் பிரதமர் பங்கேற்ற நிலையில் இன்று தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் உறுப்பினர்களும் இந்த பயிற்சி வகுப்பில் பங்கேற்றுள்ளனர்.

இதனிடையே பிரதமர், நாளை பஞ்சாப் மாநிலத்தின் வெள்ள பாதித்த பகுதிகளை ஆய்வுசெய்யவுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

**மன்சுக் மாண்டவியா**

**சுயசார்பு பாரதத்திற்கான வலுவான இன்றியமையா** தூண்களாக வேலை உருவாக்கம் திகழ்கிறது என்று மத்திய தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்பு துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், தனியார் நிறுவனங்கள் உடனான ஒருங்கிணைந்த கூட்டுநடவடிக்கைகளின் மூலம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதோடு, நாட்டின் பொருளாதாரமும் வலுவடைதாக குறிப்பிட்டார்.

வேளாண்மை, சேவை, உள்கட்டமைப்பு உள்ளிட்ட முக்கிய துறைகளின் வளர்ச்சியின் மூலம் இதுசாத்தியமாகும் என்றார்.

தேசிய வேலைவாய்ப்புகள் இணையதளம் இவ்வகையில் முக்கிய பங்காற்றுவதாகவும்,

இதில் 51 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

28 ஆயிரம் சர்வதேச வேலைவாய்ப்புகள் உட்பட 46 லட்சம் வேலைவாய்ப்புகள் இதில் பட்டியலிடப் பட்டிருப்பதாகவும் டாக்டர் மாண்டவியா குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

**இயன்முறை மருத்துவ தினம்**

**சர்வதேச இயன்முறை மருத்துவதினம் இன்று கடைப்பிடிக்கப்** படுகிறது.

அனைத்து வயதினரும் ஆரோக்கியமாக வாழ்வதற்கு இயன்முறை மருத்துவம் அவசியம் என மத்திய சுகாதார குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி.நட்டா தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ஆரோக்கியமான முதுமை என்பதை கருப்பொருளாக கொண்டு இந்த ஆண்டு இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

உடற்பயிற்சிகள் செய்வதன் மூலம் முதுமையிலும் ஆரோக்கியமாக வாழலாம் என சேலத்தை சேர்ந்த இயன்முறை மருத்துவர் செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

**ஓசூரில் வரும் 11-ம் தேதி முதலீட்டாளர்கள் மாநாடு** நடைபெறும் என்று முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக தமது ஜெர்மனி, இங்கிலாந்து நாடுகளின் 8 நாள் அரசுமுறை பயணத்தை நிறைவுசெய்து சென்னை திரும்பிய முதலமைச்சர் விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

இந்த பயணத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கு 15 ஆயிரத்து 516 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

33 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 17 ஆயிரத்து 613 பேருக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும், 10 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில்தொடங்க முன்வந்துள்ளதாகவும் முதலமைச்சர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

தமிழிசை

**தமிழகத்தில் பத்திரபதிவு கட்டணம், பால்விலை உயர்வு** உள்ளிட்ட பல்வேறு விலை உயர்வுகள் மக்களுக்கு சுமையை ஏற்படுத்தியுள்ளதாக பி.ஜே.பியின் தமிழிசை சவுந்தர்ராஜன் குறைகூறியுள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், முதலமைச்சரின் வெளிநாட்டு பயணங்களில் ஈர்க்கப்பட்ட முதலீடுகள் குறித்தும், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்தும் தெளிவான விளக்கங்கள் அளிக்க வேண்டுமென கோரினார்.

❖❖❖❖❖❖❖❖

உதயநிதி

**மருத்துவத்துறையில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக** திகழ்வதாக துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை சைதாப்பேட்டையில் 29 கோடி ரூபாய் மதிப்பில் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் கட்டப்பட்டுள்ள அரசு மருத்துவமனையை இன்று திறந்து வைத்து பேசியஅவர், 6 தளங்களுடன் கூடிய இம்மருத்துவமனையில் நவீன வசதிகள் செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதற்காக ஐ.நா.சபையின் விருது தமிழகத்திற்கு கிடைத்திருப்பதாக பெருமிதம் தெரிவித்தார்.

சென்னை விருகம்பாக்கம் கால்வாயில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெறும் தூர்வாருதல், தடுப்பு சுவரினை உயர்த்திக்கட்டுதல், சங்கிலி வேலி அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டு பணிகளையும் துணை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

நாமக்கல் வாய்ஸ்

**கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் சிலம்ப** விளையாட்டை மத்திய அரசு இணைத்ததையடுத்து கடந்த 2 ஆண்டுகளாக நாமக்கல் மாவட்டத்தில் அதிகளவில் மாணவ மாணவிகள் இப்போட்டிகளில் பங்கேற்று மாநில சர்வதேச அளவில் சாதனைகளை புரிந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖❖

**கன்னியாகுமரி வாய்ஸ்**

**நவராத்திரி விழா இம்மாதம் 22-ம் தேதி தொடங்கவுள்ள** நிலையில் கன்னியாகுமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கொலு பொம்மை விற்பனை களைக்கட்ட துவங்கியுள்ளதாக எமதுசெய்தியாளர் தெரிவிக்கிறார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖❖

**வேளாங்கண்ணி**

**நாகை வேளாங்கண்ணி புனித** ஆரோக்கிய அன்னை பேராலயத்தில் மாதாவின் பிறப்பு விழா இன்று வெகுவிமரிசையாக கொண்டாடப்படுகிறது.

நாட்டின் பல்வேறு மாநிலங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கானோர் தேவாலயத்தில் சிறப்பு பிரார்த்தனைகளை மேற்கொண்டுள்ளதோடு திருப்பலி மற்றும் ஆராதனைகளில் பங்கேற்றனர்.

நாகை மாவட்டத்திற்கு இன்று உள்ளூர் விடுமுறை விடப்பட்டுள்ளது.

வேளாங்கண்ணி ஆரோக்கிய மாதா வருடாந்திர திருவிழாவின் நிறைவை ஒட்டி அன்னையின் திருக்கொடி இறக்கம் இன்றுமாலை நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

**வானிலை**

**வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தேனி** திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, அரியலூர் மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

நாளைமறுநாள் வரை மாநிலத்தின் பல மாவட்டங்களில் மழைபெய்யக்கூடும் என்றும் இம்மையம கூறியுள்ளது

குமரிக்கடல் தென்தமிழக கடலோரம் மன்னார் வளைகுடா பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் இன்றும் நாளையும் இப்பகுதிகளுக்கு செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

**ஹாக்கி**

**சீன ஹாங்சூவில் நடைபெறும் 11-வது ஆசிய கோப்பை மகளிர்** ஹாக்கி போட்டியில் இந்தியா தற்போது சிங்கப்பூரை எதிர்கொண்டுள்ளது

இப்போட்டியில் இதுவரை இந்திய அணி 11 கோல் அடித்து முன்னிலையில் உள்ளது.

❖❖❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**சீன கேங்சூவில் நடைபெறும் சேலஞ்சர்ஸ்** டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் தகுதிச்சுற்று இறுதி போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - ஜப்பானின் **Seita Watanabe** யை இன்று எதிர்கொள்கிறார்.

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖❖